11-01-2018

மதிப்புக்குரிய சங்கை, போதகர்கள் மற்றும் ஊழியர்கள்,

**இது போன்ற நேரத்திற்கு, நம்முடைய தேசத்திற்காக ஒரு விசேஷித்த ஆசரிப்பு கூட்டம் அழைப்பு.**

ஷாலோம், 2014 ஏப்ரல் முதற்கொண்டு, எம்ஏச் 370 காணமால்போன பின்னர் மற்றும் 2014 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் ஒருங்கிணைந்த வறட்சி மற்றும் மேகமூட்டம் பின்பு, ஏஜி ஜெப ஆணையம் (ஏஜிபிசி) விசேஷித்த ஆசரிப்பு கூட்டங்களை (யோவேல் 1:14, 2:15-16) 21 நாள் உபவாச & ஜெபக் காலத்தில் ஜெபிக்க அழைப்பு விடுவித்துள்ளது.

ஒவ்வொரு தேசத்திற்கும் அளவிடப்பட்ட **அக்கிரமத்தின் பாத்திரம்** உள்ளது என்று சங்கை ஜுலியஸ் சூபியும் மற்றவர்களும் போதித்தார்கள். (ஆதி 15:16, மத் 23:32, வெளி 17:4). ஒவ்வொரு முறையும் கூட்டாக மனந்திரும்பி, அதே போல் தனித்தனியாக, அந்த பாத்திரத்தின் ஒரு பகுதியை காலியாக்கி, கோபத்தின் பாத்திரம் மற்றும் தேவனின் நியாயத்தீர்ப்பு நம்முடைய தேசத்தின்மீது தவிர்க்கப்பட. (யோனா 3:5-9, ஏசா 50:2, வெளி 16:19)

இந்த ஆண்டு **அழைப்பு இன்னும் அவசரமாக உள்ளது,** விரைவில் நடக்கவிருக்கும் பொது தேர்தல் 14, அனைத்து தேர்தலோடு தாய் தேர்தல் எனப்படுகிறது, எல்லா பகுதியிலிருந்தும், குறை சொல்லுவதும் புறங்கூறுவதும் தொடங்கியுள்ளது.

விசேஷித்த ஆசரிப்பு கூட்டம் எப்படி நடைபெறும்?

முந்தைய ஆண்டுகளின்படி, நாம் எல்லோரும் ஈடுபட நாங்கள் ஊக்குவிக்கிறோம். உங்கள் சபை....
1) உங்கள் சொந்த அங்கத்தினரோடு விசேஷித்த ஆசரிப்பு கூட்டத்தை நடத்தலாம் அல்லது
2) மற்ற சபைகளோடு சேர்ந்து விசேஷித்த ஆசரிப்பை கூட்டத்தை இணைந்து நடத்தலாம்.

எங்கள் வலைத்தளத்திலிருந்து http://agpc.org.my/ விசேஷித்த ஆசரிப்புக்கு கூட்டத்தைக் குறித்து பரிந்துரைக்கப்பட்ட பவர்பாயிண்ட் வடிவமைப்பையும் மற்றும் ஜெப புள்ளிகள் வடிவமைப்பையும் நீங்கள் பதிவிறக்கம் செய்யலாம்.

**தேதி: மார்ச் 17, 2018 (சனிக்கிழமை)** அல்லது உங்கள் சபை இந்த தேதிக்கு நெருங்கிய தேதியை தேர்ந்தெடுக்கலாம். இது லெண்ட் காலகட்டத்தில், நம் தேவனின் தியாகத்தை நினைவுகூரும் நல்ல நேரமாகும். இது நம்முடைய 21 நாள் உபவாச & ஜெபம், முதல் சனிக்கிழமை (மார்ச் 11-31, 2018) ஏப்ரல் 1- 2018 தேதி ஞாயிற்றுக்கிழமை உயிர்த்தெழுதலோடு ஆகும்.

உங்களுக்கு எந்தவித உதவி தேவைப்பட்டால், உங்கள் மாவட்டங்களில் உள்ள எங்கள் ஏஜிபிசி ஒருங்கிணைப்பாளர்களை தொடர்புகொள்ளவும். அவர்கள் எல்லா வழியிலும் உங்களுக்கு உதவ தயாராக இருப்பார்கள்.

ஒருங்கிணைப்பாளர்கள்:

| | | |
|---|---|---|
| வடக்கு மாவட்டம்: | சங்கை மார்கஸ் தான் | 04 658 4404 |
| மத்திய: | சங்கை எபினேசர் | 012 674 5081 |
| கே.எல் - கிழக்கு | சங்கை ஸ்டீபன் காங் | 012 398 3835 |
| தெற்கு மாவட்டம் | சங்கை ரூத் தான் | 012 727 9280 |
| கிழக்கு மலேசியா மாவட்டம் | சங்கை ஜோன் லிம் | 016 273 0400 |
| சீன: | சங்கை ஜானி ஹாய் | 012 933 2790 |
| மலாய்: | சங்கை ஏரேமியா கான் | 016 331 1054 |
| தமிழ்: | சங்கை ஜீவா | 012 694 0367 |

தேவ சங்க ஜெப ஆணையத்திற்கு நீங்கள் **காணிக்கைகளை எடுக்க கருத்தில்** வைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். நம்முடைய நிகழ்வுகள் மற்றும் நிகழ்ச்சிகள் நடத்த நிதி தேவை அதாவது ஜெப பீடங்கள், ஜெப வழிகாட்டிகள், ஜெப பள்ளிகள், ஜெப வாகனம் ஓட்டுகை ஆகியவை. ஜெபத்தின் மூலம், நம்முடைய தேசத்தில் தேவன் என்ன செய்யப்போகிறார் என்பதற்கு பங்கேற்பாளர்களை விசுவாசத்தில் விதைக்க சவால் பண்ணினீர்கள் என்றால் அவர்கள் ஆசீர்வதிக்கப்படுவார்கள். முன்கூட்டியே கொடுத்தீர்கள் என்றால் நாங்கள் பாராட்டுகிறோம்.

டேவிட் வில்கர்சன் ஒரு முறை தனது பிரசங்கத்தில் கூறினார்,...
**ஒவ்வொரு மனிதனும் தன் சொந்த நலனுக்காகவே பார்க்கிறான்;** பலரின் அன்பு தனிந்து போனது; தேவனுடைய பிள்ளைகளிடத்திலிருந்து மகிழ்ச்சி அற்றுப்போனது...**ஏனென்றால் பிரசங்க மேடையில்**

**எச்சரிக்கை பண்ண மேய்ப்பன் இல்லை; சீயோனின் எக்காள சத்தத்தைக் கேட்டவர் ஒருவருமில்லை:** எல்லா அக்கிரமங்களினிமித்தமும் தங்களைச் சுத்தம் பண்ணி, கர்த்தருடைய நாளை வல்லமையோடு அறிவிக்க யாருமில்லை! ''அதின் தீர்க்கதரிசிகள் வீண்பெருமையும் வஞ்சகமுமுள்ளவர்கள். அதின் ஆசாரியர்கள் பரிசுத்த ஸ்தலத்தைப் பரிசுத்தக்குலைச்சலாக்கி, வேதத்துக்கு அநியாயஞ் செய்தார்கள்'' (செப்பனியா 3:4).

இப்படி மலேசியாவில் நடைபெறக் கூடாது! அதினால் வாருங்கள்,..
''ஆவியானவர் கூறுகிறார், **சீயோனில் எக்காளம் ஊதி, என் ஜனங்களை அழைக்கவும்** ஆதலால் நீங்கள் இப்பொழுதே உபவாசத்தோடும் அழுகையோடும் புலம்பலோடும் உங்கள் **முழு இருதயத்தோடும் என்னிடத்தில் திரும்புங்கள்** என்று கர்த்தர் சொல்லுகிறார். நீங்கள் **உங்கள் வஸ்திரங்களையல்ல, உங்கள் இருதயங்களைக் கிழித்து, உங்கள் தேவனாகிய கர்த்தர் இடத்தில் திரும்புங்கள்,** அவர் இரக்கமும், மன உருக்கமும், நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையுமுள்ளவர், அவர் தீங்குக்கு மனஸ்தாபப்படுகிறவருமாயிருக்கிறார். ஒருவேளை அவர் திரும்பி மனஸ்தாபப்பட்டு, உங்கள் தேவனாகிய கர்த்தருக்குப் போஜனபலிகளையும் பானபலிகளையும் செலுத்துகிறதற்கான ஆசீர்வாதத்தைத் தந்தருளுவார்'' (யோவேல் 2:12-14)

இந்த விசேஷித்த ஆசரிப்பு கூட்டத்திற்கான **உங்கள் திட்டங்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்,** அதனால் நாம் ஒருவருக்கொருவர் கர்த்தருக்குள் பரஸ்பர உற்சாகத்தை காண்பிக்கலாம்.

நம் தேசத்திற்காக ஒன்றாக நம்புவோம்,

சங்கை கோனி ங்
ஏஜிபிசி தேசிய விசேஷித்த ஆசரிப்பு கூட்டம் ஒருங்கிணைப்பாளர்

சிசி. சங்கை தியோ க்வீ கெங்
ஏஜிபிசி தலைவர்